RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# கார்த்திகைப் பெருவிழாவும் மாவளியும்

வெ. சந்துரு [அ, *]

[அ] தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம். கலை அறிவியல் கல்லூரி, காட்டாங்குளத்தூர்-603203, இந்தியா

# The Karthigai Festival and the Tradition of Mavali

V. Chandru [a, *]

[a] Department of Tamil, SRM Arts and Science College, Kattankulathur-603203, Tamil Nadu, India

* Corresponding Author:
chandruvenkatesh614@gmail.com

**ABSTRACT**

Festivals have always played a significant role in the lives of the ancient Tamils. Most of these celebrations were closely associated with nature and seasonal changes. Among them, the Festival of Lights, popularly known as Karthigai Peruvizha (Karthigai Deepam), continues to be observed as one of the oldest and most cherished traditional festivals of the Tamil people. According to ancient Tamil belief, the month of Aippasi is characterized by continuous monsoon rains, which cool the earth and the atmosphere, bringing pleasant and chilly winds. These climatic conditions continue into the month of Karthigai. The celebration of Karthigai reflects the cultural understanding that light and warmth are essential during this cool season, blending practical necessity with aesthetic and religious traditions. On the day of Thirukarthigai, temples celebrate the Festival of Lamps by lighting rows of sacred lamps. The age-old custom of lighting lamps in temples and homes, practiced by the ancient Tamils as an act of worship, has been preserved and continues to this day. This article explores the significance of the Karthigai festival and examines the tradition of Mavali associated with its celebration.

**Keywords:** Mavali, Karthigai Festival, Celebration, Worship

## முன்னுரை

ஐப்பசி மாதம் அடைமழை என்பார்கள் நம் முன்னோர்கள். மாதம் முழுவதும் பெய்யும் மழையின் காரணமாக நிலமும் வானமும் குளிர்ந்து காற்று சில்லென்று வீசும். இது திருக்கார்த்திகை மாதமும் தொடரும். இவ்வாறு குளிர்ந்த காற்று வீசும் காரணத்தால் ஒளியும் வெப்பமும் தேவை என்பதை அழகியலுடன் சேர்த்து ஒரு பண்பாடு சார்ந்து கொண்டாடி வருகின்றனர். திருக்கார்த்திகை தினத்தன்று கோவில்களில் விளக்கீட்டுத் திருவிழா நடைபெறும். பண்டையத் தமிழர்கள் கோவில்களிலும், இல்லங்களிலும் விளக்கேற்றி வழிபடும் பழக்க வழக்கங்கள் இன்றளவும் தொன்றுதொட்டு வருகிறது. இத்தகைய கார்த்திகைத் திருநாள் விழா பற்றியும், கார்த்திகை விழாவில் கொண்டாடப்படும் மாவளி பற்றியும் இந்தக் கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

## கார்த்திகை நட்சத்திரம் (அறுமீன்)

இருளிலும் குளிரிலும் அல்லல்படும் உயிர்களுக்கு ஒளியும் வெப்பமும் தந்து வழி காட்டும் பொருட்டு, நம் பண்டைத் தமிழகத்தில் கார்த்திகைத் திங்கள் முழுவதும் அதிகாலையிலும் மாலையிலும் வீடுகளின் முன்பாக வரிசையாக விளக்கேற்றி வைக்கும் வழக்கம் இருந்தது. அஃது இன்று வரையிலும் பின்பற்றப்பட்டு வருகிறது. சங்க இலக்கியங்களில் அறுமீன் என்று அழைக்கப்பட்ட கார்த்திகை நட்சத்திரமும் முழுநிலவு நாளும் ஒன்று சேரும் நாளைக் கார்த்திகைத் திருநாளாகக் கொண்டாடும் வழக்கம் சங்ககாலத்து மக்களிடையே இருந்ததை சங்கப் பாடல்களின் வழியாக அறியலாம். முழுநிலா தன் வெளிச்சம் முழுவதையும் வெளிக்காட்டும் வானத்தில் கார்த்திகை மீனை நெருங்கும் நள்ளிரவு நேரம் தெருவெங்கிலும் மக்கள் விளக்கு வைக்கின்றனர். மாலைத் தோரணம்

கட்டுகின்றனர். பழமை மேம்பாடு கொண்ட நம் ஊரில் எல்லாரும் கார்த்திகை விழாக் கொண்டாடுகின்றனர். அவர்களுடன் சேர்ந்து நாமும் விழாக் கொண்டாட வேண்டும் என்பதை,

"குறு முயல் மறு நிறம் கிளர, மதி நிறைந்து,

அறுமீன் சேரும் அகல் இருள் நடு நாள்;

மறுகு விளக்குறுத்து, மாலை தூக்கி,

பழ விறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய

விழவு உடன் அயர"( அகம்-141.7-11)

அகநானூற்றுப் பாடல் வரிகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு அறுமீன் என்று அழைக்கப்படும் கார்த்திகை நட்சத்திரம் வானில் தோன்றும் நன்னாளில் விளக்கேற்றி கொண்டாடுகின்றனர் என்பதை அறிய முடிகிறது.

ஆறு மீன்களுடன் தோன்றும் கார்த்திகை மாதத்தில் செல்லும் ஒளிமண்டலக் கொடி போலக் கோங்கம் பூத்துக் கிடக்கும் அழகைப் பார், என்று கார்த்திகை நட்சத்திரம் தோன்றும் கார்த்திகை மாதத்தில் கோங்கம் என்னும் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன என்பதை,

"அறுமீன் பயந்த அறம் செய் திங்கள்

செல் சுடர் நெடுங் கொடி போல,

பல் பூங் கோங்கம் அணிந்த காடே" (நற்றிணை-202.9-11)

நற்றிணை பாடல் வரிகள் அறுமீன் என்னும் கார்த்திகை நட்சத்திரம் வானில் தோன்றும் என்பதை தெரிவிக்கிறது.

## கார்த்திகைப் பெருவிழா

கார்த்திகைப் பெருவிழா என்று அழைக்கப்படும் தீபத் திருவிழாவானது சங்க காலம் முதலே பண்டையத் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வரும் பாரம்பரிய விழாவாகும். அத்தகைய கார்த்திகைப் பெருவிழா கொண்டாடப்பட்டதை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கார்த்திகை விளக்குகளுக்கு உவமையாக இலவ மரத்துப் பூக்களைப் பாடுகின்றனர் புலவர்கள்.

இலவம் பூவானது கார்த்திகை விளக்குப் போல தோற்றத்தைக் கொண்டுள்ளதை, ஆங்கு இலவம் பஞ்சி ஒருங்கே மலர அவை ஆரவாரத்தை உடைய மகளிர் மகிழ்ந்தெடுக்கும் கார்த்திகை வரிசை போன்று தோன்றும் என்பதை,

"இலைஇல மலர்ந்த முகைஇல் இலவம்

கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த

அம்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி" (அகம்.11.3-5)

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது.

பசுமையே இல்லாது காய்ந்து கல்லாய் இருக்கும் மலை உச்சியிலுள்ள வெம்மையான அந்த வழியிலே, வானம் வறண்டு மழை அற்றுப்போனதால் அருவிகள் வற்றிப்போன, உயரமான மலை உச்சியிலிருந்த இலவமரங்கள் இலையே இல்லாது பூக்களாகவே மலர்ந்திருப்பது, கார்த்திகைப் பெருவிழா விளக்குகள் இருப்பது போலத் தெரியும் அந்த உயர்ந்த மலைத்தொடர்களைத் தலைவன் கடந்து சென்றார் என்பதை,

"வேனில் அத்தத்து ஆங்கண் வான்உலந்து

அருவி ஆன்ற உயர்சிமை மருங்கில்,

பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்

இலைஇல மலர்ந்த இலவமொடு" (அகம்: 185: 9 - 12)

மலையில் இலைகள் அற்றுக் காணப்படும் இலவ மரத்தில் பூக்கும் பூக்களின் நிறமானது பெருவிழா விளக்கம் போன்று காணப்படும் என்று உவமை அழகியலோடு எடுத்துரைக்கிறது இந்தப் பாடல். இவ்வாறு இலவமரத்தில் பூத்திருக்கும் பூக்களை கார்த்திகை விழாவில் ஏற்றும் விளக்கிற்கு உவமையாக சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கார்த்திகையில் ஏற்றப்பட்ட விளக்கானது பிரகாசமாக இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. நன்மை மிகுந்த கார்த்திகைத் திருநாளில்

நாட்டினர் ஏற்றிவைத்த முதல்நாள் விளக்கைப் போல எல்லா இடங்களிலும் தோன்றிப்பூக்கள் பூத்தன என்பதை,

"நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட

தலைநாள் விளக்கின் தகயுடைய ஆகிப்

புலமெலாம் பூத்தன தோன்றி" (கார்.நாற்: 26: 1 - 3)

கார் நாற்பது பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது.

கார்த்திகை நாளானது மக்களுக்கு நன்மையைத் தரக்கூடிய ஒரு நாளாக இருந்துள்ளது என்பதையும், அக்கார்த்திகை விளக்கானது சிவந்த செங்காந்தள் மலர் போன்று எல்லா இடங்களிலும் பிரகாசமாய் இருந்தது என்பதை அறிய முடிகிறது. போர்க்கொடி ஏந்திய படையோடு சோழன் ஆரவாரித்து போர்க்களத்தில் போர் செய்கிறான். போர்வீரர்கள் ஒருவரோடு ஒருவர் எதிர்த்து ஓடி, குத்தி, வெட்டித் தாக்கி, தூக்கி எறிவதால் உடலில் இருந்து குருதி வழிந்து ஓடியது. அப்படி வழிந்தோடிய அந்த இரத்த ஆறு, கார்த்திகைத் திருவிழாவில் எண்ணமுடியாத அளவிற்கு ஏற்றப்பட்ட கார்த்திகை விளக்கின் தீபச்சுடர் அசைந்தாடி தொடர்ந்து செல்வது போல ஓடியது என்பதை,

"ஆர்ப்பு எழுந்த ஞாட்பினுள் ஆள் ஆள் எதிர்து ஓடி

தாக்கி எறிதர வீழ்தரும் ஒண்குருதி

கார்த்திகைச் சாற்றில் கழி விளக்குப் போன்றனவே" (கள.நாற்பது: 17.1-3)

களவழி நாற்பது பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது.

போர்க்களத்தில் ஓடும் இரத்த ஆற்றினை கார்த்திகையில் ஏற்றப்பட்ட எண்ணற்ற விளக்குகளோடு ஒப்பிட்டு கூறியிருப்பதில் இருந்து, கார்த்திகைப் பெருவிழாவில் எண்ணற்ற விளக்குகள் ஏற்றப்பட்டிருந்து என்பதை அறிய முடிகிறது. சங்க காலப் பெண்கள் இரும்பு விளக்கின் இரு திரிகளில் தீபமேற்றி, நெல் மற்றும் மலர் தூவி கைகூப்பி வழிபட்ட வழிபாட்டு முறையை

"இரும்புசெய் விளக்கின் ஈர்த்திரிக் கொளீஇ

நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது" (நெடுநல்வாடை.42-43)

என்ற பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது. இவ்வாறாக மண்ணால் செய்யப்பட்ட விளக்குகள் மட்டுமல்லாது இரும்பினால் செய்யப்பட்ட விளக்கினையும் தங்களது விளக்கேற்றும் பண்பாட்டில் வைத்துள்ளனர் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. இலக்கியங்கள் மட்டுமல்லாமல் இலக்கண நூலான தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் மன்னனின் வெற்றியைக் குறிக்கும் வேலைக் காக்கும் பொருட்டு, கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழா நாளில் விளக்கேற்றி வழிபடும் முறையை,

"வேலி நோக்கிய விளக்கு நிலையும்" (தொல் புறம். 35)

தொல்காப்பியர் விளக்கீட்டுத் திருவிழா பற்றிக் கூறுகிறார். இந்த வரியின் மூலமாக தீபத் திருவிழாவானது பழம்பெரும் விழா என்பதை அறிய முடிகிறது.

## மாவளி

மாவளி என்பது கார்த்திகை தீபத் திருநாளில் ஆண் பனையின் பனம் பூவை தீயில் இட்டு பின் அதனைப் பொடியாக்கிச் செய்யப்பட்ட பந்தினைத் தீயிட்டுச் சுற்றி மகிழும் பழமையான தமிழர் மரபாகும். இது இயற்கையை வழிபடும் சூழலியல் சார்ந்த பண்டிகையாகவும் கொண்டாடப்படுகிறது. கார்த்திகைப் பெருவிழா கொண்டாடும் நாளில் இந்த மாவளி சுற்றுதலும் கொண்டாடப்படுகிறது. இஃது இயற்கையோடு இணைந்து வாழ்ந்த தமிழர்களின் பண்பாட்டைக் குறிக்கிறது. சங்க காலத்திலிருந்தே மக்கள் ஒளியை இறைவனாகவும், இயற்கையின் அடையாளமாகவும் கருதி வழிபட்டுள்ளனர். இந்த ஒளி விழாவின் ஓர் அங்கமாகவே மாவளி சுற்றுதல் திகழ்கிறது. கார்த்திகை தீபத்திற்கு அடுத்த நாள் நாட்டு கார்த்திகை விழா கொண்டாடப்படுகிறது. அந்நாளில் மாவளி சுற்றும் பண்பாட்டு நிகழ்வு நடைபெறுகிறது. திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், சேலம் உள்ளிட்ட பகுதிகளில் வாழும் மக்கள் இன்றும் மாவளி சுற்றுதலை பின்பற்றி வருகின்றனர்.

'மாவளி' சுற்றுதல் கார்த்திகைத் தீபநாளில் நடத்தப்படும் விளையாட்டாகும். பனம்பூவைக் கருக்கித் தூளாக்கி துணியில் பொட்டலமாகத் துணியில் கட்டி வைத்துக்கொள்வார்கள். இப்பொட்டலத்தை பனைஓலை மட்டைகளின் நடுவே வைத்துக் கட்டிவிடுவார்கள். இதை நீண்ட கயிற்றில் கட்டிவைத்துக்கொண்டு நெருப்பை வைத்து விடுவார்கள். இப்போது கயிற்றைப் பிடித்து வேகமாக சுற்றுவார்கள். அது தீப்பொறிகளைச் சிதறவிட்டு சுற்றுவதற்குத் தகுந்தவாறு பல

உருவங்களை ஏற்படுத்தும். அப்போது “மாவளியோ மாவளி” என்று சத்தமிடுவார்கள். இது பார்ப்பதற்கு ஒரு இனிய காட்சியாக இருக்கும். மா ஒளி = பெரிய ஒளி என்பது மருவி மாவளி ஆகியிருக்க வேண்டும். இவ்வழக்கம் நீண்டகாலமாக வழக்கில் இருப்பதை, இக்காட்சி பாறை ஓவியத்தில் காணப்படுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்” (மகாராசன், பண்பாட்டு அழகியலும் அரசியலும். ப.46) என்று மாவளி சுற்றும் பண்பாட்டைக் குறித்து தனது நூலில் குறிப்பிட்டுள்ளார் மகாராசன். மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம் ஐகுந்தம் பாறை ஓவியத்தில் இடம்பெற்ற மாவளி சுற்றும் காட்சியானது, மாவளி சுற்றுதலின் பழமையும், பண்பாட்டையும் வெளிக்காட்டும் பெட்டகமாகத் திகழ்கிறது.

## முடிவுரை

பண்டைய தமிழர்கள் தங்களது வாழ்வில் கடைப்பிடித்த நடைமுறைகளும், பண்பாடுகளும் ஏராளம். ஒவ்வொரு திருவிழாவையும் இயற்கை சார்ந்தே கொண்டாடி வருகின்றனர். அத்தகைய பண்பாட்டு சார்ந்த திருவிழாவில் கார்த்திகைப் பெருவிழா என்று அழைக்கப்படும் தீபத் திருவிழாவும் ஒன்று. அத்தகைய தீபத் திருவிழாவானது ஈராயிரம் ஆண்டுகட்கும் மேலாக தமிழர்களால் இன்றளவும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தகைய வரலாற்றையும், பண்பாட்டையும் கொண்ட தீபத் திருவிழாவைப் பற்றி சங்க இலக்கியங்கள் போற்றி பாடியுள்ளன. மேற்கண்ட சங்கப் பாடல்கள் அனைத்தும் கார்த்திகைப் பெருவிழா பற்றியும், ஒளி சார்ந்த வழிபாடு பற்றியும், பண்டைய தமிழர்களின் பண்பாட்டு தொடர்ச்சி பற்றியும் இந்தக் கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது. மேலும் மாவளி என்றழைக்கப்படும் பண்பாடு சார்ந்த கொண்டாட்டங்கள் குறித்தும் இந்தக் கட்டுரையின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

## References


அடிகளாசிரியர் (2008), தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்.

இராமசுப்பிரமணியம், வ.த (2009), சங்க இலக்கியம் அகநானூறு (மூலமும் தெளிவுரையும்), திருமகள் நிலையம், சென்னை.

இளங்குமரன், இரா, (2013) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், மாணவர் பதிப்பகம், சென்னை.

கோவிலூர் (2003) சங்க இலக்கியம் மூலமும் உரையும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு, கோவிலூர் மடாலயப் பதிப்பு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

பாலசுப்பிரமணியன், கு.வெ (2004), நற்றிணை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை

மகாராசன், பண்பாட்டு அழகியலும் அரசியலும், ஆதி பதிப்பகம், சென்னை



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License